# களபூமி கலையகம்
# KALAPOOMY KALAIYAGAM

களபூமி, காரைநகர். Est:27 July 2013

"கல்வியுடன் கலை வளர்த்து வாழ்வில் வளம் பெறுவீர்"

பதிவு இல.: வட.மா.க.அ.பண்/யாழ்./காரை 2014/01 அரச பதிவு இல.: CD/04/09/01/02/JAF/025


24/07/2017

தெலுங்கு ஆகிய மொழிகளையும் கற்றறிந்தவன். ஆதனால் தான் தமிழின் இனிமையினை எடுத்தியம்பினான். இதற்கு உதாரணமாக அமரர் விஜயரத்தினம் மாஸ்ரரின் பிள்ளைகளை எடுத்துக்கொள்ளலாம். பிரதம விருந்தினர் கலாநிதி வீரமங்கையும் அவரது இளையவரான கலாநிதி கென்னடி விஜயரத்தினம் அவர்களும் தந்தையைப் போன்று ஆங்கிலத்தில் புலமை பெற்று விரிவுரையாளர்களாக இருந்தாலும் தாய் மொழியாம் தமிழிலும் பண்டித்தியம் பெற்றுள்ளனர். கலாநிதி கென்னடி அவர்களைச் சில வார்த்தைகள் கூறும்படி மேடைக்கு அழைத்தபொழுது ஏதென்ஸ் மாநகரின் இளைஞர்களை சோக்கிரதீஸ் எப்படி விழித்தானோ அதே பாணியில் நம் சிறார்களின் சிந்தனைகளைத் தட்டியெழுப்பும் வண்ணம் தனது உரையினையாற்றினார். அத்துடன் நில்லாது நிர்வாகத்தின் வேண்டுகோளிற்கிணங்க ' புல்லாங்குழலூதும் மூங்கில்களே புருஷோத்தமன் புகழ் பாடுங்களே' என்ற பாட்டினைப் பாடி சபையினரை மகிழ்வித்தார். இன்னிசையில் களபூமி தர்மலிங்கம் ஐயா (வயது 82) அவர்கள் 60களில் வெளியான 'மலர்ந்தும் மலராத..' என்ற பாடலை இசை பிசகாமல் பாடி மகிழ்வித்தார். களபூமி மாணவர்களின் சிறந்த முறையில் அரங்கேறிய சங்கீதம், நடனம் மிருதங்கம் ஆகியவற்றிற்கு மேற்குறிப்பிட்ட நிகழ்வுகள் மெருகூட்டின என்றால் மிகையாகாது. பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர், கௌரவ விருந்தினர்கள் அனைவரும் அறிவு கலந்த ஆக்க பூர்வமான கருத்துக்களை வழங்கியிருந்தார்கள். அவர்களுக்கு எமது நன்றி கலந்த பாராட்டுக்கள். இந்நிகழ்ச்சியினைப் பார்த்த பின் களபூமி கலைகத்திற்கு நல்ல எதிர் காலமுண்டு என்று திடமாகக் கருதலாம்

நன்றியுடன்

சிவா தி மகேசன்